

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 5 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் முகம்மது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 38 மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

★ நான் முதல்வன்
★ இல்லம் தேடி கல்வி
★ புதுமைப் பெண்
★ அனைவர்க்கும் ஐஐடி போன்ற திட்டங்கள்.

**தரத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே அளவு கோலோடுஇயங்க வேண்டும்!**

அரசு பள்ளி தனியார் பள்ளிகளும், அரசு கல்லூரி - தனியார் கல்லூரிகளும், நிர்வாக அமைப்பில் வேறுபாடு கொண்டதாக இருக்கலாம். ஆனால் தரத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே அளவுகோலோடுதான் இயங்கவேண்டும். இந்த நிறுவனங்கள் எல்லோருக்கும் பொதுவான நிறுவனங்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சமச்சீர் நிலையைதான் உருவாக்கி வருகிறோம். நாட்டினுடைய முதன்மைக் கல்வி நிறுவனங்களில் இதுவரைக்கும் நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்கள் மிகக் குறைவான அளவில்தான் உயர்கல்விக்காகப் போயிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும்.

கல்வியிலேயும் இதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய நிலைப்பாடு. அதிலும், உயர்கல்விக்குப் போகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். இதற்காக கொண்டுவரப்பட்டதுதான், ‘அனை வருக்கும் ஐ.ஐ.டி’ திட்டம்!

**கிராமப்புற மாணவர்கள் மேல் படிப்புக்கு புதிய பாதையை உருவாக்கி இருக்கிறோம்!**

தமிழ்நாட்டினுடைய எங்கேயோ ஒரு கிராமத்தில் இருக்கின்ற ஒரு அரசுப் பள்ளியில் படித்த ஒரு மாணவரால், ஏன் இதுவரைக்கும் I.I.T, N.L.U, நிஃப்ட் போன்ற நாட்டினுடைய முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களுக்குப் போக முடியாமல் இருந்தது என்றால், அதற்கு என்று தனியாக சமூகப் பொருளாதாரக் காரணங்கள் இருக்கிறது.

நம்முடைய குழந்தைகளுக்கு நாட்டினுடைய உயர்கல்வி நிறுவ னங்கள் எவை? அதில் நுழைய எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? போட்டித் தேர்வுகளுக்கு படிக்கும் முறை என்ன? இப்படி பல தகவல்கள் சென்று சேராமல் இருந்தது. இப்போது அந்தப் பாதைய உருவாக்கி இருக்கோம். அதுனால, இன்னைக்கு 225 மாணவர்கள் நாட்டின் முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு போகப்போறாங்க. பள்ளிக் கல்வித் துறையோட கடுமையான முயற்சிகளாலதான் இது சாத்தியமாச்சு!

**அமைச்சர் மகேஷ் பொய்யாமொழியின் பணி தலைமுறை தலைமுறைக்கும் பயனளிக்கும்!**

இங்கே இருக்கின்ற பள்ளி மாணவர்களான உங்களை மாதிரியே உங்கள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் ரொம்ப எனர்ஜெட்டியா இருக்கிறார். அவரை குழந்தையாக இருக்கின்ற காலத்திலிருந்து நான் பார்த்துக் கொண்டு வருகிறேன். என் கண் முன்னாடி வளர்ந்த பையன், இன்றைக்கு அமைச்சர் என்று நான் சொல்லுகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறார்.

இந்தப் பள்ளிக் கல்வித் துறையில் அவர் செஞ்சிட்டு வர்ற பணிகள் தலைமுறை தலைமுறைக்கும் பயனுள்ள பணிகளாக அமைந்திருப்பது நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

இந்த சாதனையை பற்றி கொஞ்சம் விரிவாக புள்ளிவிவரங்களுடன் சொலவேண்டும் என்றால், கடந்த ஆண்டு முதன்மை கல்வி நிறுவனங்களுக்குச் சென்று அரசுப் பள்ளி மாணவர்களோட எண்ணிக்கை 75. இந்த ஆண்டு 225. இது மிகப்பெரிய சாதனை!

அரசுப் பள்ளி மாணவர்களில் கடந்த ஆண்டு ஐ.ஐ.டி.க்கு போனவர் ஒரே ஒருத்தர்தான். ஆனால் இந்த ஆண்டு, 6 பேர் செல்கிறார்கள்.

**அரசுப் பள்ளி மாணவர்களின் இந்தாண்டு சாதனைகள் !**

கடந்த ஆண்டு தேசிய தொழில்நுட்ப கழகம், இந்திய தகவல் தொழில்நுட்ப கழகங்கள், தேசிய உணவு தொழில் நுட்பம், தொழில் முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம் ஆகியவற்றிற்கு சென்றவர்கள் 13 பேர். இந்த ஆண்டு 55 பேர் செல்கிறார்கள்.

National Forensics Science Universityக்கு கடந்த கல்வியாண்டில் சென்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?

ஜீரோ! ஆனால் இந்த ஆண்டு 6 பேர் தேர்வாகி இருக்கிறார்கள்.

> **ந**ம்முடைய குழந்தைங்களுக்கு நாட்டினுடைய உயர்கல்வி நிறுவனங்கள் எவை? அதில் நுழைய எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? போட்டித் தேர்வுகளுக்கு படிக்கும் முறை என்ன? இப்படி பல தகவல்கள் சென்று சேராமல் இருந்தது. இப்போது அந்தப் பாதைய உருவாக்கி இருக்கோம். அதுனால, இன்னைக்கு 225 மாணவர்கள் நாட்டின் முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு போகப்போறாங்க. பள்ளிக் கல்வித் துறையோட கடுமையான முயற்சிகளாலதான் இது சாத்தியமாச்சு!

முழு ஸ்காலர்ஷிப்புடன் தைவான் ஸ்டேட் யுனிவர்சிட்டியில் படிப்பதற்கு இரண்டு அரசுப் பள்ளி மாணவர்கள் தேர்வாகி இருக்கிறார்கள்.

Indian Maritime Universityல் கடந்த ஆண்டு ஒருவரும் போகாத நிலையில் இந்த ஆண்டு 6 மாணவர்கள் செல்லயிருக்கிறார்கள்.

National Law Universityக்கு கடந்த ஆண்டு 4 பேர். இந்த ஆண்டு 9 பேர்.

School of Excellence in Lawவுக்கு கடந்த ஆண்டு ஒருத்தர்தான்; இந்த ஆண்டு 7 பேர்.

National Institute of Fashion Technologyல் இந்த ஆண்டு 27 பேர் படிக்கப் போகிறார்கள். கடந்த ஆண்டு யாரும் போகவில்லை!

கடந்த ஆண்டு மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கு 6 பேர் படிக்கப் போனார்கள்; இந்தக் கல்வியாண்டில் 20 பேர் செல்கிறார்கள்.

School of Architectureக்குத்தான் இந்த ஆண்டு அதிகம் பேர் படிக்கப் போகிறார்கள். கடந்த ஆண்டு ஒரே ஒரு மாணவர்தான் அங்கே சென்றார். ஆனால் இந்த ஆண்டு 69 பேர் போகப் போகிறார்கள்.

Indian Institutes of Science Education and Researchக்கு கடந்த ஆண்டு ஒருவரும் போகாத நிலையில், இந்த ஆண்டு அந்த நிலை மாறி, 10 அரசுப் பள்ளி மாணவர்கள் போகிறார்கள்.

**நாட்டின் முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்கு 225 பேர் படிக்கச் செல்வது நமக்கு பெருமை!**

இப்படி, மொத்தம் 225 அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து படிக்கப் போகிறீர்கள் என்பது நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய விஷயம் இது!

தனியார் பள்ளி மாணவர்களால் மட்டும்தான் இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு போக முடியும் என்ற எண்ணத்தை உடைத்து, இன்றைக்கு நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களும் போக முடியும் என்ற சாதனையை நீங்கள் படைத்திருக்கிறீர்கள். இது மூலமாக அரசுப் பள்ளியுடைய கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது என்ற உண்மை உலகுக்குத் தெரிய வந்திருக்கிறது. எல்லாத்தையும்விட மிக முக்கியமாக நான் நினைப்பது என்னவென்றால், உயர் கல்வி நிறுவனங் களுக்குள்ள நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களான நீங்களும் நுழை யும்போதுதான் சமூக நீதி முழுமை யடைகின்றது.

2022-23ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் 25 மாவட்டங்களில், 25 மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டது. இவையெல்லாம் உண்டு உறைவிடப் பள்ளிகளாக செயல்பட்டு வருகிறது. இதிலிருந்து முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்குப் செல்வதற்கு விருப்பம் இருக்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுத்தோம்.

இந்தக் கல்வியாண்டில், மேலும் 13 பள்ளிகள் தொடங்கப்பட்டு இன்றைக்கு 38 மாவட்டங்களிலும், மாதிரிப் பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதனுடைய விளைவுதான் இன்றைக்கு இத்தனை மாணவர்கள் முதன்மை கல்விநிறுவனங்களில் படிக்கப் செல்கிறார்கள்.

மாதிரிப் பள்ளிகளினுடைய மாணவர்கள் இந்த நிலையை அடைவதற்கு கடுமையாக உழைத்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

மாணவர்களுடைய படிப்பதற்கான செலவை அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. படிப்ப முடிச்சிட்டு நீங்க வெளிய வரும்போது உங்களோட உலகம் ரொம்ப பெரியதாக இருக்கும். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் மலர வேண்டும் என்றால் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கின்ற மாதிரி இருக்க வேண்டும்.

இந்த உயர்கல்வி மூலமா உங்க எல்லாருக்கும் அது சாத்தியப்பட்டிருக்கு. நீங்கள் இப்போது படிக்கப் போகின்ற கல்வி நிறுவனத்துக்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் சேரக்கூடிய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நீங்கள்தான் வழி காட்டணும்.

**கல்வி நிறுவன அலுவலர்கள் மாணவர்களுக்கு நல்வழி காட்டுவார்கள்!**

மேடையில இருக்கின்ற, IIT, NIT, NLU நிறுவனங்களுடைய பொறுப்பான பதவியில் இருக்கின்ற அலுவலர்களிடம், நான் கேட்டுக் கொள்வதெல்லாம், “எங்கள் பிள்ளைகள் உங்களிடம் வருகிறார்கள். அவர்களை அரவணைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு வழிகாட்டுங்கள்” என்பதுதான்.

மாணவர்களிடம் நான் பேசும்போதெல்லாம் சொல்கிறதுதான், மறுபடியும் இங்கேயும் சொல்ல விரும்புறேன். அரசு ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்புகள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிங்க! படிங்க! படிங்க! இதுதான் என்னோட வேண்டுகோள்.

படிக்கின்ற காலத்தில் கவனச்சிதறல்கள் இருக்கக்கூடாது. உங்களை இந்த ளவுக்கு வளர்த்துவிட்ட உங்களுடைய பெற்றோர்கள் - ஆசிரியர்களை மனதில் வைத்து செயல்படுங்கள். இன்னும் பல உயரங்கள் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

ஒளிமயமான எதிர்காலம் உங்களை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ராகுல் காந்தி உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

உண்மையான இந்திய மக்களை பார்த்தேன். மக்கள், எனக்கு ஏராளமான உதவிகளை செய்தனர். அவர்களின் ஆதரவும் கிடைத்தது. ஏழைகளின் வேதனைகளையும் உணர்ந்தேன். அனைத்துத் தரப்பு மக்களும் எனது பயணத்தில் இணைந்தனர்.

**இந்தியாவில் தற்போது விவசாயிகளின் நிலை மிக மோசம்!**

விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்தேன். விவசாயிகளின் இதயத்தில் இருந்த வலி என் இதயத்துக்கு இடம் மாறியது. இந்தப் பயணம் எனது வாழ்க்கையை மாற்றியது. நாட்டு மக்களின் குரலை கேட்கும் போது மனதில் உள்ள வெறுப்புகள், ஆசைகள் விலகிச் செல்லும். இந்தியாவில் விவசாயிகளின் நிலை மோசமாக இருந்ததைக் கண்டேன்.

மணிப்பூருக்கு நான் சென்று வந்தேன். இந்நாள் வரை பிரதமர் மணிப்பூர் மாநிலத்திற்குச் செல்லவில்லை. மணிப்பூர் இந்தியாவில் இல்லையா? நாட்டின் ஒரு பகுதியாக கருதாததால் தான் பிரதமர் அங்கு செல்லவில்லை. அம்மாநில மக்களை பிரதமர் கைவிட்டு விட்டார். மணிப்பூரில் நிவாரண முகாம்களில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் பேசினேன். தன் கண் முன்னே தன் ஒரே மகன் மீது துப்பாக்கி குண்டு பாய்ந்தது என்று பெண் ஒருவர் என்னிடம் சொன்னார். மகனை இழந்தபெண்உடைமைகளைவிட்டு விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

மற்றொரு முகாமில் உங்களுக்கு என்ன நடந்தது என்று ஒரு பெண்ணைப்பார்த்துநான்கேட்டதும் அவர் மயக்கம் அடைந்தார். நினைத்துப்பார்க்கவேபயங்கரமான சம்பவங்கள்நடந்துள்ளதாகநிவாரண முகாமில் உள்ள பெண்கள் தெரிவித்தனர்.

இந்தியா என்ற சித்தாந்தத்தையே அரசு கொன்றிருப்பது மணிப்பூர் சம்பவம்மூலம்நிரூபணமாகியுள்ளது. மணிப்பூரில் நடக்கும் சம்பவம் ஒட்டுமொத்த நாட்டின் மீதான கொலை.

**மணிப்பூரில் இந்தியாவை கொலை செய்தீர்கள்!**

பா.ஜ.க.வின் அரசியலில், மணிப்பூரில் நமது நாடு கொலை செய்யப்பட்டுவிட்டது. மணிப்பூரில் இந்தியாவை கொலை செய்தீர்கள்.

மணிப்பூரில் மக்களை கொன்றதால் இந்திய தாய் கொலை செய்யப்பட்டார்.நீங்கள்தேசபக்தர்கள் அல்ல. தேச துரோகிகள். மணிப்பூர் குரலை நசுக்கிவிட்டீர்கள்.

என் ஒரு தாய் இங்கே அமர்ந்திருக்கிறார். மற்றொருதாயை மணிப்பூரில் கொன்றிருக்கிறீர்கள். நீங்கள் பாதுகாவலர்கள் அல்ல. மணிப்பூர் கலவரத்தை இந்திய ராணுவத்தால் ஒரே நாளில் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அதனை நீங்கள் செய்யவில்லை.

**அரசின் அலட்சியத்தால் மணிப்பூர் – அரியானா எரிகிறது!**

மோடி தலைமையிலான அரசின் அலட்சியத்தால்மணிப்பூர்,அரியானா போன்ற மாநிலங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு ராகுல்காந்தி உரையாற்றினார்.

**பா.ஜ.க. கடும் இடையூறு!**

நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் மீது ராகுல் காந்தி உரையாற்றிய போது, பா.ஜ.க. உறுப்பினர்கள் தொடர்ந்து இடையூறு செய்யும் வகையில் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.மக்களவைத்தலைவரின் வேண்டுகோளை மதிக்காமல் பா.ஜ.க.வினர் முழக்கமிட்டுக் கொண்டே இருந்தனர்.

ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால் சாலிகிராமத்தில் கட்டப்பட்ட

# கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.10-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், நேற்று முன்தினம் 08.08.2023), திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால், கதவு எண். 24, அருணாச்சலம் சாலை, சாலிகிராமம் , சென்னை - 600 093 முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் தற்போது ஏற்பட்டுள்ள கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வளாக கட்டிடம் 5 தொகுப்புகளுடன் கூடிய அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கு 17.05.2011 அன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இக்கட்டிடத்திற்கு 20.10.2015 அன்று பணிநிறைவுச் சான்றிதழும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

தற்போது இவ்வளாகத்தில் குடியிருப்புகளை வாங்கியுள்ள குடியிருப்பு உரிமைதாரர்கள் மேற்படி இக்கட்டிடத்தினை திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனம் சரியாக கட்டி தங்களுக்கு ஒப்படைக்கவில்லை என்ற கோரிக்கையின் பேரில் ஊடகத்தில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வு செய்யப்பட்டது.

இக்கட்டிடத்தின் சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP No. 12880 of 2022 நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் நீதிமன்றம் இக்கட்டிடத்தின் கட்டுமான நிறுவனரை சென்னை ஐ.ஐ.டி.யில் ரூபாய் இரண்டு கோடி செலுத்தி ஆய்வறிக்கையினை பெறுமாறு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து கட்டுமான நிறுவனர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு கடந்த 13.02.2023 அன்று இவ்வழக்கினை உயர்நீதி மன்றத்திலேயே தீர்த்துக்கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தது. ஆனால் கட்டிட மேம்பாட்டாளர் M/s. Jain Housing இதுநாள் வரை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளாகத்தின் குடியிருப்பில் வசிப்பவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருதி அமைச்சர் அவர்கள் M/s. CUBE நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடம் முழுவதுமாக தொழில்நுட்ப ஆய்வு செய்து இக்கட்டிடத்தின் தற்போதைய நிலைக்கான காரணம் மற்றும் கட்டிடத்தின் உறுதித்தன்மையின் தொழில்நுட்ப ஆய்வறிக்கையினை விரைவில் பெற்று மக்களின் நலனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியுள்ளார்.

வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் கூறினர்!

புதுக்கோட்டை ஆக.10-

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வைரமணி மற்றும் குமார் ஆகியோரை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 08.08.2023 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அதனைத்தொடர்ந்து, வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, திருமலை ஆகியோர்களின் வாரிசுதாரர்களிடம் அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் தஜ.சா.மெர்சி ரம்யா உடனிருந்தார்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களிடம் எஸ்.ரகுபதி ஆறுதல் கூறி, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் அவர்களுக்கு உயர்தரத்திலான சிகிச்சையினை மேற்கொள்ளவும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அரசு மருத்தவக்கல்லூரி முதல்வர் (பொ) மருத்துவர் ராஜ்மோகன், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஆசெந்தில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!



Agra Court stays BJP MP Ram Shankar Katheria conviction

August 07, 2023 10:53 pm | Updated 10:53 pm IST – Lucknow

The court order will help Mr. Katheria evade disqualification from Parliament

THE HINDU BUREAU

பா.ஜ.க. எம்.பி. ராம்சங்கர் கத்தேரியா மீதான தண்டனைக்கு ஆக்ரா நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவு, கத்தேரியா நாடாளுமன்றத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க உதவும்.